**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்ற சிறப்புக்கூட்டம்**
**நாள். 27.02.2021 சனிக்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

**மன்றப்பொருள்: 1**

உசிலம்பட்டி நகராட்சி பேரையூர் சாலையில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடை பணி நிறைவு பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர நகர் பகுதியில் உள்ள தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற நகராட்சிகளில் செயல்பட்டு வரும் நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகளை செய்து வரும் தொண்டு நிறுவனங்களை தொடர்பு கொள்ளப்பட்டது.

இந்நிலையில் Peoples Trust in Technical Institute திருமங்கலம் என்ற தொண்டு நிறுவனம் தனது 21.01.2018–ம் தேதிய கடிதத்தில் பல்வேறு சமூக நலப்பணிகளை செய்து வருவதாகவும், பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து நலம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் சேவைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நவீன எரிவாயு தகன மேடை கட்டிடம் இறுதி கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி பணிகள் முடிவடைந்த உடன் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு Peoples Trust in Technical Insititute தொண்டு நிறுவனத்தால் தொடர் பராமரிப்பு செய்து வர தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், ஒரு பிரேதம் எரியூட்டுவதற்கு ஆகும் செலவினம் ரூ. 3,000/– என நிர்ணயம் செய்து இதில் 60% தொண்டு நிறுவன பங்குத்தொகையாகவும், 40% நகராட்சி பங்குத்தொகையாகவும் நிர்ணயம் செய்திடவும், மின் கட்டணம் மாதந்தோறும் தொண்டு நிறுவனத்தால் மின்வாரியத்திற்கு செலுத்தி வரவும் இதே நிறுவனத்திற்கு கடந்த 29.11.2019–ஆம் தேதியன்று பராமரிப்பு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியதை தொடர்ந்து தற்போது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் எரிவாயு மின்தகன மேடைக்கு தடையில்லாச்சான்று பெற்றததை தொடர்ந்து Peoples Trust in Technical Institute திருமங்கலம் என்ற நிறுவனத்திற்கு 27.02.2021 முதல் 28.02.2022 வரை பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒரு வருட காலத்திற்கு மட்டும் அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி மின் மயானத்தில் சட்ட விரோதமாக பிரேதங்கள் எரிப்பதற்கு தடை விதிக்கப்படுகிறது. தனி அலுவலரின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)
உசிலம்பட்டி நகராட்சி.